**மட்டக்களப்பு மாநகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-------------------------------------------------------

## 1 நிதிக்கூற்றுகள்

## 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 30 இல் மாநகர ஆணையாளரிற்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மட்டக்களப்பு மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்ட பங்களிப்பு பணம் ரூபா 28,799,619 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 105,689,284 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 110,729,563 ஆக இருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

மாநகர சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான திரண்ட வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 31 திசெம்பர் 2016 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| வீதவரிகள் | 20,723,359 | 20,795,676 | 21,765,402 |
| விளம்பர கட்டணம் | 3,284,642 | 4,386,397 | 1,178,878 |
| வியாபார கட்டணம் | 9,256,600 | 10,112,864 | 2,036,788 |
| கொல்களக் கட்டணம் | 31,939 | 36,980 | 12,133 |
| கடைக் குத்தகை | 15,603,004 | 19,288,037 | 6,710,186 |
| களியாட்ட வரி | 1,367,641 | 1,395,155 | 917,927 |
| விடுதி வாடகை | 98,554 | 98,554 | 326,350 |
| வெளிக்கடை வாடகை | 2,708,230 | 2,412,908 | 1,311,296 |
| சந்தைக்கடை வாடகை | 3,139,500 | 3,162,263 | 949,033 |
| வாடி வீட்டு வாடகை | 468,000 | 390,000 | 893,823 |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

மரணமடைந்த 03 ஊழியர்களிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் நிலுவை ரூபா 10,057 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஓழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 2.2.2 (அ) | காணாமல் போன தண்ணீர் பவுசரின் கிரயத்தை ஏடுகளிலிருந்து பதிவழிக்காமை. |
| 2015 | 3.2.2 | 2008 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகவுள்ள ஆதனவரியை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 3.2.3 | மூன்று அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கிய வாடி |

| | | |
|---|---|---|
| | | வீடுகள் தொடர்பான வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 4.1 (ஆ) | ஓய்வு பெற்ற 05 ஊழியர்களின் கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 4.1 (இ) | பதவி வறிதாக்கப்பட்ட 06 ஊழியர்களின் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 4.2 (ஆ) | தனியார் காணிகளை உப பிரிகை செய்து விற்பனை செய்கையில் பொது வசதிகளுக்காக ஒப்படைக்கப்பட்ட ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 4.4 (அ) | மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் அமைக்கப்பட்ட திண்மக் கழிவு சேகரிக்கும் நிலையத்தால் சுழல் மாசடைதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடுகளை பேணுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் |